செ.வெ.எண் : 42/ மார்ச் நாள் : 20.03.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**
**தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து**

**தேர்தல் பார்வையாளர்கள்**
**மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர்**
**திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நேரில் ஆய்வு.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் இன்று (20.03.2021) சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பார்வையாளர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில், தேர்தல் பணிகள் தொடர்பாக வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு பொதுத்தேர்தல் பார்வையாளர்களாக (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) திரு.சொராப் பாபு,இ.ஆ.ப.,(Thiru.Sorabh Babu, I.A.S.,) அவர்கள், (பரமக்குடி) திரு.விசோப் கென்யே, இ.ஆ.ப.,(Thiru.Wezope Kenye, I.A.S.,) அவர்கள், (திருவாடானை) திரு.அனுரக் வர்மா,இ.ஆ.ப.,(Thiru.Anurag Verma,I.A.S.,) அவர்கள் ஆகியோரும், காவல் பார்வையாளராக திரு.அனூப் A செட்டி,இ.கா.ப.,(Thiru.Anoop A Shetty,I.P.S.,) அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் பார்வையாளர்கள் அனைவரும் அந்தந்த சட்டமன்ற தெகுதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் முன்னேற்பாடு நடவடிக்கைகளை நேரில் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்கு எண்ணும் மையமான அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். குறிப்பாக, தேர்தல் வாக்குப்பதிவில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்கள் (VVPAT) அனைத்தையும் சட்டமன்ற தொகுதிகள் வாரியாக பிரித்து பாதுகாப்பாக வைக்கும் பாதுகாப்பு அறைகள் (Strong Room), வாக்கு எண்ணும் அறைகள் ஆகியவற்றின் இடவசதி மற்றும் தற்போதைய நிலை, வாக்கு எண்ணும் பணிகளின் போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பு அறையிலிருந்து வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்வதற்கான வழி, வேட்பாளர்கள்/வேட்பாளர்களின் முகவர்கள், தேர்தல் அலுவலர்கள் வாக்கு எண்ணும் அறைக்கு வந்து செல்வதற்கான வழி என முறையே திட்டமிட்டு போதிய பேரிகேட் தடுப்புகள் அமைத்திடவும், போதிய சிசிடிவி கேமரா அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தேர்தல் பார்வையாளர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஏ.சிவகாமி, உதவி தேர்தல் அலுவலர்கள் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., (இராமநாதபுரம் சார் ஆட்சியர்) திரு.து.தங்கவேல் (பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர்), பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பி.செந்தில்குமார், உதவி செயற் பொறியாளர் திரு.குருதிவேல்மாறன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) க.நஜிமுன்னிசா உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**